RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224106

# மா. நடராசன் படைப்புகளில் பண்பாட்டுப் பதிவுகள்

இரா. பிரபாகர் [அ], வெ. மீனா [அ, *]

[அ] தமிழ்த்துறை, திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி, இராசிபுரம்-637401, இந்தியா

# Cultural Records in M. Nadarasan's Works

R. Prabhakar [a], V. Meena [a, *]

[a] Department of Tamil, Thiruvalluvar government Arts college, Rasipuram-637401, India

* Corresponding Author:
meenasiva1106@gmail.com

Received: 18-05-2022
Revised: 28-09-2022
Accepted: 01-10-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

The word 'Culture' is associated only with humans. It distinguishes humans from other living beings. Culture varies over time, from one country to another, and from one community to another. While culture begins with an individual and exists within society, today this concept has also gained attention in political and economic contexts. Culture, in this article, can be seen through the works of M. Natarajan, depicting the lifestyle of a particular regional community and their religious practices and customs.

**Keywords:** Culture, Regional Community, Politics, M. Natarajan

## முன்னுரை

பண்பாடு என்னும் சொல் மனிதனோடு மட்டுமே தொடர்புடையது. இவை பிற உயிரினகளிடமிருந்து மனிதனை பிரிந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. பண்பாடானது காலத்திற்கு காலம் நாட்டிற்கு நாடு, இனத்திற்கு இனம் வேறுபடுகின்றன. பண்பாடு தனி மனிதனில் தொடங்கிச் சமுதாயத்தில் நிலை கொண்டுள்ள இச்சொல்லானது இன்று அரசியல், பொருளாதாரப் பின்புலத்திலும் கவனம் பெறுகின்ற ஒன்றாக மாறி இருக்கின்றன. ஒரு நாட்டின் பெருமைக்கு சிறப்புக் காரணம் அங்கு வாழ்கின்ற மக்களின் பண்பாடுதான் என்பதை,

"நாடாகு ஒன்றோ, காடாகு ஒன்றோ
அவலாகு ஒன்றோ மிசையாகு ஒன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்?
அவ்வழி நல்லை வாழிய நிலனே!"

(துரைசாமிப்பிள்ளை.சு.ஔவை.,1962)

என்ற ஔவையாரின் பாடல் சுட்டுகிறது. மேலும் பண்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட வட்டார மக்களின் வாழ்க்கை முறை மற்றும் அவர்களின் வழிபாட்டு முறைகள், பழக்க வழக்கங்கள் பற்றி மா.நடராசன் படைப்புகளின் வழியாக இக்கட்டுரையில் காணலாம்.

## பண்பாடு - சொல் பொருள் விளக்கம்

பண்பாடு என்பதற்கு பல்வேறு வரையறைகள் தரப்பட்டிருந்தாலும் மனிதனின் பண்பிலிருந்து உருவானது தான் பண்பாடாகும். மேலும் "பண்படு" என்பதிலிருந்து பண்பாடு வந்திருக்கலாம் என்றும், "பண்படுதல்" என்பதற்கு அமைதல், உதவுதல், ஏவல் செய்தல், சீர்திருத்தல், செப்பமாதல் எனவும், "பண்பாடு" என்பதற்குச் செல்வி, குணநலம், சீர்திருத்தம், பெருமை, தன்மை, அமைதி, இயல்வு என்று மதுரைத் தமிழ்ப் பேரகராதி பொருள் தருகின்றன.

"பண் என்னாம் பாடற்கு இயைபின்றேல் மண் என்னாம்

கண்ணோட்டம் இல்லாத கண்" (பரிமேலழகர் (உ.ஆ) 1970)

பண்பாடு என்பது இசைந்து ஒழுகுதல் என்று பொருளாகும் மலர் ஒன்று சேர்ந்து வாழ் வாழ்க்கையைப் பண்பட்ட வாழ்க்கை எனவும் அவர்களை பண்பட்ட மக்கள் எனவும் இசைந்து ஒழுகுதலைப் பண்பாடு எனவும் கூறலாம்.

பண்பாடு என்பது மனிதனை சரியான திசையில் கொண்டு செல்லும் ஒரு வழிப்பாதையாகும், மனித சமூகத்தில் பண்பாடு, மக்களை வழி நடத்திச் செல்லும் கருவியாக காணப்படுகின்றன.

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்

பண்பு பாராட்டும் உலகு" -குறள் 994 (பரிமேலழகர் (உ.ஆ) 1970)

என்ற குறளில், நீதி தன்மையை விரும்பி பிறருக்குப் பயன்பட்டு வாழ்ந்து வருகின்ற பெரியோரின் நல்ல பண்பினை உலகத்தார் போற்றுகின்றனர். பண்பாட்டிற்கு பொருள் கூறும் வகையில் "பிறர் இயல்பை அறிந்து நடக்கும் நற்குணம்" என்று சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி குறிப்பிடுகிறது. மேலும் பண்பு என்பது தனி மனிதனிடம் தோன்றிய பிறகு சமுதாயம் அதனை ஏற்றுக் கொண்டு பண்பாடாக சமூகத்தினரால் காக்கப்பட்டு தலைமுறை தலைமுறையாகக் கடைபிடித்து வருகின்றனர்.

பண்பாடு என்ற சொல்லுக்கு ஆங்கிலத்தில் 'CULTURE' என்பது எண்ணங்கள், உணர்வுகள், மதிப்பீடுகள், குறிக்கோள்கள், செயல்முறைகள், இயல்புகள் போன்ற பல்வேறு எண்ணற்ற தன்மைகளை உள்ளடக்கியதாகும்.

பண்பாடு என்பது மக்களின் ஒழுங்கு படுத்தப்பட்ட வாழ்க்கை முறையினை எடுத்துரைக்கின்றன. மக்களின் அன்றாட வாழ்க்கையில் நிகழ்கின்ற செயலிலிருந்தும் பண்பாடு வெளிப்படுகிறது. மக்களின் உணவு, உடை, பழக்க வழக்கம், நம்பிக்கை, சடங்கு முறைகள், வழிபாடுகள், கலை, சட்டம், ஒழுங்கு முறை போன்றவற்றின் மூலம் பண்பாடு வெளிப்படுகின்றன.

"பண்பெனப் படுவது பாடறிந்து தொழுகுதல்" (விசுவநாதன்.அ (உ) 2007)

என்ற பாடலில் ஒருவன் தன் சூழ்நிலைக்கேற்றவாறு நடந்து கொள்கின்ற விதமே பண்பாடாகும். "பண்படுத்துதல்" என்பதற்கு சீர்படுத்தல் என்ற தமிழ் அகராதி குறிப்பிடுகிறது. சீர்படுத்துதல் என்பது ஒழுங்குமுறை ஒழுங்குபடுத்துவதாகும். அந்த வகையில் நிலப்பகுதியினை வேளாண்மைக்கு ஏற்ற வகையில் ஒத்த தன்மையுடையதாக உருவாக்குவதாகும். நிலத்தைப் போன்று மனிதனைப் படுத்துவதே பண்பாடும்.

## பண்பாட்டின் பொருள் சார் கூறுகள்

பண்பாட்டின் பொருள்சார் கூறுகளை நெறிமுறைகள், விழுமியங்கள், விதிகள், குழவழக்குகள், வழக்கடிபாடுகள், பழக்கவழக்கங்கள், அன்பளிப்புகள், நம்பிக்கைகள், கனவுகள், பயன், இன்பம், விரக்தி போன்றவை மனிதளவில் உணர்ந்து கொள்கின்ற எந்த ஒரு செயலும் உள்ளார்ந்த பண்பாடாகும். ஒரு சமூகத்தின் பண்பாட்டை நேரடியாக அறிந்து கொள்ள இயலாது.

செயல் வடிவமாகவோ எண்ணத்தின் வெளிப்பாடாகவோ உணர்வுகளின் வெளிப்பாடாகவோ கதை, கவிதை, இசை, நடனம், சைகை, குறியீடு போன்ற எண்ணற்ற பொருள்சாராக் கூறுகளின் மூலம் வெளிப்பாடகவோ அறிந்து கொள்ள முடியும். இவற்றின் தொகுப்பை உள்ளார்ந்த பண்பாடு என மானிடவியலாளர் குறிப்பிட்டுள்ளார்.

## மா.நடராசன் படைப்புகளில் காணலாகும் பண்பாடுகள்

### பழக்க வழக்கங்கள்

பழக்கவழக்கங்கள் என்பது ஒருவர் பல முறை செய்து வருவதால் தனக்குள்ளாக உருவாகும் ஒரு குறிப்பிட்ட செயலைக் குறிக்கின்றன. இது தனிப்பட்ட செயல்முறையாகத் தொடங்கி சமூகத்தில் பலரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நீண்டகாலமாகப் பின்பற்றப்பட்டும் வழக்கமாகும். ஒரு குறிப்பிட்ட பகுதி மக்கள் திருவிழாவிற்கு வருமாறு அழைப்பதற்கு நாவிதரை அனுப்புவார்கள். என்பதை, "இதென்னும்மா இது புதுத்தினுசா இருக்குது? நம்ம ஊர்லியேல்லாம் நேரம்பி சாட்டினா வேட்டுவ நாசுவன் தானே அழைப்புக்கு போறது" (மா. நடராசன்,2015) என்று சின்னச்சாமி அம்மாவிடம் தன் ஊர்ப்பழக்கத்திற்கு மாறாகப் பெரிய அக்கா ஊர் பழக்கம் இருப்பதை, "என்ன எழவு கெரகமோ? ஊருக்கு ஊர் ஒவ்வொரு பழக்கம் வெச்சிருக்காங்க" (மா. நடராசன்,2015) மேலும், "அப்படியெல்லாம் ஒண்ணுமில்லயப்பா! எல்லார் ஊட்டுக்கு நோம்பி அழைப்புக்கு வேட்டுவ நாசுவன்தான் போவான். ஆனால் அந்த ஊருக்கு அந்தை கூட்டத்துப் பையனுக்குப் பொண்ணுக் குடுத்திருக்கிறாங்க பாரு. அந்தப் பொண்ணோட பொறந்த ஊட்டுக்கு மட்டும் தனியாகக் கொங்க நாசுவன் போக வேண்டும்" (மா. நடராசன்,2015) என்று சின்னச்சாமியின் அப்பா அக்காவின் ஊர் வழக்கத்தைப் பற்றி கூறினார் என்பதை காணமுடிகிறது.

### நம்பிக்கை

நம்பிக்கை என்பது, ஒருவர் ஏதாவது ஒன்றை உண்மை என கருதி அதைப்பற்றி மிகுந்த விருப்பத்துடன் அல்லது பற்றுடன் நம்புகின்ற உளவியல் நிலையாகும். ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைவதற்கு உதவும் உறுதி, எதிர்காலத்தில் நடக்கும் என எதிர்பார்க்கும் போது அதற்கு நேர்மறையான மனநிலை, மற்றும் கண்ணுக்குப் புலப்படாத ஒன்று கிடைக்கும் என்ற ஐயமற்ற நிலையை குறிப்பதாகும். நம்பிக்கையானது தனிநபர்களின் ஆழ்மனதில் உருவாகின்ற மனநிலையாகும். இம் மனநிலையினை மா.நடராசன் கந்தாயம் சிறுகதையில், "சத்தியம் செய்து கொண்டவர்கள் அந்தச் சத்தியத்தை குறிக்காமல் ஒருவர் இன்னொருவர் வீட்டில் தண்ணீர் கூடக் குடிக்கக்கூடாது. ஒருவர் எல்லையில் இன்னொருவர் கால் வைக்கக் கூடாது அதை மீறி நடந்தாள் நடந்தவர் வீட்டில் சாவு நிச்சயம்" (மா. நடராசன், 2015) என்ற நம்பிக்கையை பதிவு செய்துள்ளார்.

### விளையாட்டு

விளையாட்டு என்பது மன மகிழ்விற்காகவும், கல்விக்காகவும், மன அழுத்தம் குறைவதற்காகவும், உடல் நலம் மேம்படுதவற்காகவும் மற்றும் ஒரு சமூக நடவடிக்கையாகவும் விளையாடப்படுகின்ற செயற்பாடாகும். இம் மண்ணில் பிறந்த ஒவ்வொருவரும் விரும்பக்கூடிய ஒன்றாக விளையாட்டு காணப்படுகின்றன. மனிதன் விளையாடும் போது சிறந்த உடற்பயிற்சியினை பெறுகின்றனர். சடுகுடு விளையாட்டினைப் பற்றி மா.நடராசன்.

"அவன் அவன் ஊட்டுக்கு
அவரைக்காச் சோத்துக்குப்
பாப்பான் ஊருக்கு

பச்சைநெல்லஞ் சோத்துக்கு

போய்ட்டு வாங்கப்பா....

நாளைக்குப் பொழுதோட

நல்லா விளையாடலாம்

எல்லாரும் வந்து சேருங்கோ...”(மா. நடராசன்,2016)

என்று பாட்டுப் பாடி விளையாடி மகிழ்ந்ததைப் பற்றி ஒண்டிக்காரன் பண்ணையம் நாவலின் வழியாக கூறியுள்ளார்.

## திருமண சடங்கு முறைகள்

உலகில் பல்வேறு சமூகத்தவரிடையே பல்வேறு விதமான சடங்குகள் நடைபெற்று வருகின்றன. மனிதரின் வாழ்வோடு சம்பந்தமான பல சடங்குகள் காணப்படுகின்றன. அவை பிறப்பு, பெயர் சூட்டுதல், காது குத்துதல், பூப்படைதல், திருமணம், வளைகாப்பு, இறப்பு ஆகியவற்றோடு தொடர்புடைய சடங்கு முறைகள் தமிழ் மக்களின் வாழ்க்கையோடு தொடர்பு கொண்டுள்ளன.

சடங்கு முறைகள் பல்வேறு நோக்கங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வகையில் குறிப்பிட்ட சமூகத்தில் வழிவழியாக பல சடங்கு முறைகளை கடைபிடித்து வருகின்றனர். இப்பொதெல்லாம் திருமணத்தின் போது மண்டபத்திலேயே திருமணச் சடங்குகள் அனைத்தையும் செய்து விடுகின்றனர்.

இதற்கு பின்னர் “மறுசரடு மாற்றும்“ (மா. நடராசன்,2015) முறைக்காக சம்பந்தியின் ஊருக்குச் சென்று அங்கு மாப்பிள்ளையின் ஊருக்குச் சென்று தேநீரோ, பாலோ ஏதாவது ஒன்று அருந்தி விட்டு அந்த ஊரில் இருக்கின்ற விநாயகர் கோவிலில் மாப்பிள்ளை முதலில் கட்டிய “உக்கழுத்துச்சரட்டை“ அவிழ்த்து விநாயகன் காலடியில் வைத்து விட்டு வேறொரு புதுச்சரடை அந்த ஊர் பண்டாத்தார் கொடுக்க கூட அவற்றை வாங்கிக் கட்டிக் கொள்வாள். மணப்பெண் இவ்வாறான சடங்கு முறைகள் திருமணத்திற்கு பின்பும் நடைபெறுகின்றன.

## பூப்பு நீர் செய்தல்

பூப்பு சீர் செய்வது என்பன தமிழ் சமுதாயத்தில் பெண்கள் பூப்படைந்தவுடன் அவர்களுக்கு செய்கின்ற சடங்கு முறைகளை குறிப்பதாகும். மேலும் பெண்ணின் கையில் வேப்பிலை, கைகோதி கொடுத்து ஒரு புறமாக அமரவைத்துவிடுவர். பின்னர் மாமன் பச்சை ஓலை குடிசை சாட்டுவார்கள். தினையும் கம்பு மாவும் பழம் நெய்யுடன் சேர்த்து தருவார்கள். இந்த நிகழ்வின் போது பெண்ணுக்குத் தேவையான பரிசு பொருட்களை தாய்மாமன் வழங்குவார். அப்பெண்ணின் வாழ்க்கையில் புதிய அத்தியாயத்தைத் தொடங்குவதற்கான நிகழ்வாக கருதப்படுகிறது. இவை பூப்புனித நீராட்டு விழா அல்லது மஞ்சள் நீராட்டு விழா என அழைக்கப்படுகிறது. மேலும் ராமாத்தாள் பூப்படைந்தவுடன் அவருக்கு தெரட்டிச் சீர் செய்தனர். அந்த நிகழ்வானது ஒரு பெரிய நிகழ்ச்சியாகவும் விழாவாகவும் கொண்டாடினார்கள். ஆயிரம் பேருக்கு மதிய உணவு அளித்தனர். இந்நிகழ்வானது ஒரு பெரிய திருவிழாவைப் போல நடைபெற்றன என்பதை மா.நடராசன் அப்பத்தாளும் ஒரு கல்யாணமும் என்ற சிறுகதையின் வழியாக கூறியுள்ளார்.

## திருவிழாவிற்கு சீர் செய்யும் முறை

திருவிழாவின் போது ஒவ்வொரு பெண்ணிற்கும் தன்னுடைய பிறந்த வீட்டில் இருந்து சீர் செய்கின்ற முறைகளை குறிப்பதாகும். வறுமையில் இருக்கின்ற மக்களும் தங்களுக்கு முடிந்த அளவுக்கு சீர் வரிசைகளை செய்து வருகின்றனர். என்பதை மா.நடராசன் ஒண்டிக்காரன் பண்ணையம் என்ற நாவலில் சீர் செய்யும் முறையினை சின்னச்சாமியின் அம்மா "அந்தக் காலத்திலே வட்டலுங்கூட மாதிரிப் பெட்டைப் புள்ளைகளுக்கு நோம்பிக்குச் சீர் செய்ய வேண்டும்" (மா. நடராசன்,2016) என்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் பொருளாதார வசதிக்கேற்ப திருவிழாவை ஏற்பாடு செய்து அதன் மூலம் தெய்வ வரலாறுகள், பண்பாட்டுக் கூறுகள் முதலியவற்றை வெளிப்படுத்துகின்றனர். தாகூர் கூறுவது போல "விழா என்னும் திறந்த வாசல் வழியாகத்தான் நம் நாட்டு மக்களை அறிந்து கொள்ள முடியும்" (வேங்கடசாமி, மயிலை சீனி.,1978) என்று கூறியுள்ளார். பல்வேறு காரணங்களால் பிரிந்து இருக்கின்ற மக்களை ஒன்றிணைப்பதே திருவிழாவாகும்.

## முடிவுரை

இவ்வாறாக சமுதாயத்தில் வாழ்கின்ற மக்கள் தங்களுக்கென சில பழக்கவழக்கங்கள், பண்பாடுகள், நம்பிக்கைகள் முதலியவற்றைக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் வாழ்க்கை முறையினை அடிப்படையாகக் கொண்டு மா.நடராசன் படைப்புகளின் வழியாக அறிந்து கொள்வதே இக்கட்டுரையின் முடிவுரையாகும்.

## References


Duraisamipillai, S. (1962) Purananuru Moolamum Uraiyum, Saiva Siddhanta Publishing Society, Chennai, India

M. Natarajan, (2015) Kanthayam, New Century Book House, Chennai, India

M. Natarajan, (2015) Ondikkaran Pannaiyam, New Century Book House, Chennai, India

M. Natarajan, (2016) Mayilai Maadu, New Century Book House, Chennai, India

Parimelazhagar (1970) Thirukkural Moolamum Uraiyum, Saiva Siddhanta Publishing Society, Chennai, India

Vengadasamy, Mayilai Seeni., (1978) History of Kongu Nadu, New Century Book House, Chennai, India

Viswanathan, A. (2007) Kalithogai: Text and Commentary, New Century Book House (P) Ltd, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License